# இடம் பொருள் கலைஞர்

83

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் குதிரைப் பந்தய நினைவுச் சின்னம்!








# குதிரைப் பந்தய நினைவுச் சின்னம்!

## சூதுக்கு முடிவு கட்டிய சூரியன்!

சென்னையின் முக்கிய அடையாளங்களில் அண்ணா மேம்பாலம் தவிர்க்க இயலாதது. பொன்விழா கண்டு புதுப்பொலிவு அடைந்த அந்த மேம்பாலத்தின் இருபுறத்திலும் சிலிர்த்து எழும் குதிரையை இழுத்துப் பிடித்து நிறுத்தும் வீரனோடு கூடிய சிலைகள் இரண்டு புறங்களிலும் இருக்கும். அது குதிரையை அடக்கி நிறுத்துவதற்கான அடையாளம் மட்டும் அல்ல, குதிரைப் பந்தயத்தை முடக்கியதற்கான வரலாற்றுச் சின்னம். அந்தச் சின்னம் வரலாற்றை நினைவுகூர எழுப்பப்பட்டது அல்ல, புதியதொரு வரலாற்றை எழுத எழுப்பப்பட்டது.

### குதிரைப் பந்தயம் தொடக்கம்!

ஆங்கிலேயர் காலத்தில் இந்தியாவுக்குள் தேநீரும், ரயிலும், கிரிக்கெட்டும் நுழைந்ததைப் போல குதிரைப் பந்தயமும் நுழைந்தது. அதுவும் சென்னையில்தான் முதன்முதலில் நுழைந்தது. முதல் குதிரைப் பந்தயம் நடைபெற்ற ஆண்டு 1777. பொழுதுபோக்கிற்கு வழியில்லாத அந்தக் காலகட்டத்தில் தறிகெட்டு ஓடும் குதிரைகளின் மீது பணத்தைக் கட்டி நேரத்தைக் கழிப்பது, புதுவிதமான பொழுதுபோக்காகவும் பணம் சேரச் சேர அது போதையாகவும் மாறி இருந்தது. அந்தப் போதைக்குப் பலரும் பழக்கப்படவே, குதிரைப் பந்தயம் 1837-இல் ஓர் அமைப்பாக வலுப்பெற்று, **'மெட்ராஸ் ரேஸ் கிளப்'** உருவானது. பந்தயக் குதிரைகளின் வேகத்திற்கு ஈடாக பணமும் கொட்டியது.

பரம்பரைச் சொத்துக்களை விற்று, மனைவியின் நகைகளை விற்று, பந்தயம் கட்டி வாழ்வைத் தொலைத்தவர்கள் ஏராளம். ஜமீன்தார்கள், சினிமா நட்சத்திரங்கள் எனப் பலரும் வாழ்வைத் தொலைத்து நிர்கதியானார்கள். 1900-களுக்குப் பிந்தைய காலகட்டத்தில் பணக்காரர்கள் மட்டுமின்றி, அன்றாடக் கூலிகளும் குதிரைப் பந்தயத்தில் பணத்தைக் கட்டும் அளவுக்கு நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. தொடர்கதையாகிக் கொண்டிருந்த இந்தக் கொடுமைக்கு முடிவு கட்ட, பிரிட்டிஷ் ஆட்சியில் எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

### ஆட்டம் கண்ட குதிரைப் பந்தயம்

ஹைதர் அலிக்கும் பிரிட்டிஷ் படைக்கும் இடையில் போர் மூண்ட காலத்தில், முதன்முதலில் குதிரைப் பந்தயம் சிறிது காலம் முடங்கியது. 1906-ஆம் ஆண்டில் குதிரைப் பந்தயத்தை மீண்டும் ஆட்டம் காண வைத்தது. அர்பத்நாட் அண்ட் கோ வங்கி, பிரிட்டிஷ் ஆட்சியில் தென்னிந்தியாவில் இருந்த முக்கிய வங்கிகளில் ஒன்று. இந்த அர்பத்நாட் அண்ட் கோ வங்கியில்தான் மெட்ராஸ் ரேஸ் கிளப்பின் பணமும் இருந்தது. பிரிட்டனில் இந்த நிறுவனம் எதிர்கொண்ட நிதி நெருக்கடிகளால் 1906-ஆம் ஆண்டில் திவா லானது.

இது மதராஸ் மாகாணத்திற்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தியது. அதில் குதிரைப் பந்தயமும் ஊசலாட்டம் கண்டது. ஆனால், அதுவும் தற்காலிகம்தான். அடுத்து 1919-ஆம் ஆண்டு **'முதல் உலகப் போர்'** காலகட்டத்தில் குதிரைப் பந்தயம் மந்தநிலையை எதிர்கொண்டது. அதன்பிறகு, 1949-ஆம் ஆண்டில் மதராஸ் நகர காவல் & விளையாட்டுத் திருத்தச் சட்டம் மூலம் குதிரைப் பந்தய சூதாட்டத்தைத் தடை செய்ய முயற்சிகள் நடந்தன. ஆனால், சட்டம் அமலுக்கு வரவில்லை, சட்டம் அமலுக்கு வந்துவிடும் என்று பந்தயக்காரர்களும் அஞ்சவில்லை.

### 200 ஆண்டு ஓட்டத்திற்கு முதல் முடிவு!

1967-ஆம் ஆண்டில் தி.மு.கழகம் முதன்முதலாக ஆட்சிக்கு வந்தபோது, இந்தியாவில் குதிரைப் பந்தயம் தொடங்கி, 190 ஆண்டுகள் ஆகியிருந்தன. இந்த சூதாட்டம் இனியும் தேவையா என்ற வாதங்கள் தலைதூக்கின. எனினும், தமிழ்நாட்டில் மட்டும் தடை செய்வதால், என்ன பயன் என்ற கேள்வியும் எழுந்தது. கேளிக்கை வரியாக அப்போதே அரசுக்கு 2 கோடி ரூபாய் வருமானத்தைக் கொடுத்து வந்தது குதிரைப் பந்தயம். அதனால், தமிழ்நாட்டில் குதிரைப் பந்தயம் ஒருவேளை தடை செய்யப்பட்டால், தமிழ்நாட்டின் எல்லையை யொட்டி இருக்கும் அண்டை மாநிலங்கள் குதிரைப் பந்தயத்தை நடத்தத் தயாராக இருந்தன. 1969-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் நிதி மற்றும் வருவாய்த் துறை அமைச்சராக இருந்த கே.ஏ.மதியழகன் சட்டமன்றத்தில் பேசியபோது, "தமிழ்நாட்டில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் குதிரைப் பந்தயத்தைத் தடை செய்தால், திருப்பதியில் குதிரைப் பந்தயம் நடத்தி, வரி வருவாய் ஈட்டத் தயாராக இருக்கிறோம் என்று, ஆந்திர முதல்வர் கூறுகிறார்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனாலும், இரு நூற்றாண்டுச் சூதாட்டத்திற்கு முடிவுரை எழுதியே தீர்வது என 1974-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் தீர்மானித்தார். 14-8-1974 அன்று சட்டப்பேரவையில் முதல் துணை மதிப்பீடுகளை வைத்த கலைஞர், பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் தேதி முதல் தமிழ்நாட்டில் மீண்டும் முழுமையான மது விலக்கு அமல்படுத்தப்படுவதாக அறிவித்தார். மது மட்டுமா போதை? சூதாட்டமும் போதைதானே? "நீண்ட நெடுநாட்களாக நல்லோர் பலரின் முறையீடாக இருந்து வருவதும், ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டதுமான குதிரைப் பந்தயத்தை அறவே ஒழிப்பது என்று அரசு முடிவு செய்கிறது" என்ற மற்றொரு அறிவிப்பினையும் சேர்த்தே செய்தார் கலைஞர். குதிரைப் பந்தய பெரும்புள்ளிகளுக்குப் பேரிடியைக் கொடுத்தது.

> அண்ணா மேம்பாலமும், அதன் கீழே எழுப்பப்பட்ட குதிரைப்பந்தய நிறுத்த நினைவுச் சின்னமும் முத்தமிழறிஞர் கலைஞரைப் போல இப்போதும் கம்பீரமாக நிற்கின்றன.

### நிலைத்து நிற்கும் நினைவுச்சின்னம்

1975-ஆம் ஆண்டு சென்னை, கிண்டியில் ராஜாஜியின் நினைவாலயத்தை திறந்து வைத்த பேசிய ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள், "குதிரைப் பந்தயம் ஒரு சூதாட்டம். அதனை அண்மையில் இங்கு ஒழித்துவிட்டார்கள். இதனால் இங்குள்ள பெரும்புள்ளிகளுக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கலாம்" என்றார். அவர் கூறியதுபோல, பந்தயத்தில் கொழுத்தவர்களுக்கும், பெரும்புள்ளிகளுக்கும் கோபம் ஏற்பட்டு நீதிமன்றத்தை நாடினர்.

உச்சநீதிமன்றம் தமிழ்நாடு அரசின் தடையை நிறுத்தி வைத்தது. இருந்தபோதிலும், பந்தயத்தின் வீரியம் குறைந்தது. குதிரைப் பந்தயத்தை நாடிச்சென்று பணத்தை இழந்து, வாழ்வைத் தொலைப்போரின் எண்ணிக்கை குறைந்தது. மொத்தத்தில் கலைஞரின் நோக்கம் வென்றது.

200 ஆண்டு கால போதைக்குக் கட்டப்பட்ட முடிவு, காலத்திற்கும் நிலைத்து நிற்க வேண்டாமா? குதிரைப் பந்தய தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டதற்கு முந்தைய ஆண்டில்தான் சென்னை அண்ணா சாலையில் அண்ணா மேம்பாலம் திறக்கப்பட்டிருந்தது. அந்த மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியில் குதிரைப் பந்தயம் நிறுத்தப்படுவதற்கான நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டது. அரை நூற்றாண்டும் கடந்துவிட்டது.

அண்ணா மேம்பாலமும், அதன் கீழே எழுப்பப்பட்ட குதிரைப்பந்தய நிறுத்த நினைவுச் சின்னமும் முத்தமிழறிஞர் கலைஞரைப் போல இப்போதும் கம்பீரமாக நிற்கின்றன.

...வலம் வருவோம்

## சிந்துவெளி நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள்!

சிந்துவெளி குறித்த கண்டுபிடிப்பை, சர் ஜான் ஹூபர்ட் மார்ஷல் 20.9.1924 அன்று 'தி இல்லஸ்ட்ரேட்டட் லண்டன் வீக்லி' இதழில் வெளியிட்டு, நூறு ஆண்டுகள் ஆகின்றன. அந்த நூற்றாண்டுக் கொண்டாட்டத்தைப் பல அமைப்புகளும் முன்னெடுத்துள்ளன.

சிந்துவெளிப் பண்பாடு குறித்த கவன ஈர்ப்பை உருவாக்கிய ஆய்வாளர்,

ஓய்வுபெற்ற ஆட்சிப்பணி அதிகாரியான ஆர்.பாலகிருஷ்ணன், சிந்துவெளி குறித்து உரையாடும் நேர்காணல்களின் தொகுப்பு நூல் 'சங்க இலக்கியம் எனும் சிந்துவெளித் திறவுகோல்'. இந்த நூலை தமிழ் மரபு அறக்கட்டளை வெளியிட்டுள்ளது.

23.08.2024 வெள்ளிக்கிழமை மாலை சென்னை, பச்சையப்பன் கல்லூரியில், ஆர்.பாலகிருஷ்ணன், அவரது, 'ஒரு பண்பாட்டின் பயணம்' என்னும் நூலை உருவாக்கிய ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக இயக்குநர் சுந்தர் கணேசன், ஆய்வாளர் பக்தவத்சலப் பாரதி ஆகியோர் கலந்துகொள்ளும் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. 24 மற்றும் 25 தேதிகளில், தரங்கம்பாடியில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் 'சிந்துவெளி அகழ்வாய்வு நூற்றாண்டு' கருத்தாளர் முகாம் நடத்துகிறது.

சங்க இலக்கியம், சிந்துவெளிப் பண்பாடு. கீழடி ஆகிய மூன்றும் இணைந்து ஒரு நேர்க்கோட்டில் செல்வதாக நிறுவும் ஆர்.பாலகிருஷ்ணன் இது தொடர்பாக கூறுகையில்,

"சங்க இலக்கியம் என்பது இன்னமும் முழுவதுமாக தோண்டப்படாத கீழடி:

கீழடி என்பது முழுமையாக வாசிக்கப்படாத சங்க இலக்கியம்" என்கிறார்.

"சங்க இலக்கியம் சிந்துவெளிப் பண்பாடு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு எனும்போது சிந்துவெளி ஒரு வன்பொருள் என்றால், சங்க இலக்கியம் அதைப் புரிந்துகொள்ள உதவும் ஒரே மென்பொருள், சிந்துவெளியைப் புரிந்துகொள்ள உதவும் திறவுகோல் சங்க இலக்கியம்தான்" என்றும் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### இந்தி எதிர்ப்பு மாநாடு!



பெ.ந.பழநிச்சாமி

1963-ஆம் ஆண்டு, சென்னை, சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி மாணவத் தலைவனாக இருந்தேன். அப்போது, சென்னை அனைத்துக் கல்லூரிகள் தமிழ்மன்றத்தின் தலைவராக கழகத்தின் தற்போதைய பொதுச்செயலாளர் அண்ணன் துரைமுருகன் இருந்தார். நான் பொருளாளராக இருந்தேன். இந்தி எதிர்ப்புப் போராட்டம் உச்சத்தில் இருந்த நேரம், 11.12.1963 அன்று, கோகலே மண்டபத்தில் ஆட்சிமொழிக் கருத்தரங்கு என்னும் பெயரில் 'இந்தி எதிர்ப்பு மாநாடு' நடத்தினோம். முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர், அப்துல் சமது, எஸ்.எஸ்.மாரிசாமி ஆகியோர் கலந்துகொண்டு உணர்ச்சிமிகு உரையாற்றினர். **'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'** என்னும் தலைப்பில் உணர்ச்சிப் பிழம்பாக நான் உரையாற்றும் வாய்ப்பைப் பெற்றேன். இந்தி எதிர்ப்புப் போராட்ட ஈடுபாடு காரணமாக, எனது கடவுச்சீட்டு விண்ணப்பம் 10 ஆண்டுகளுக்கு மேல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**– பெ.ந.பழநிச்சாமி, கழக இலக்கிய அணி, நாமக்கல் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மீண்டும் திரைப்படத்துக்கு...


1967-ஆம் ஆண்டு முதல் 1969-ஆம் ஆண்டு வரை அமைச்சராகவும், 1969-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரை முதலமைச்சராகவும் இருந்த காலகட்டத்தில், கலைஞர் திரைப்படத்துறையில் தலையிடவில்லை. 1978-ஆம் ஆண்டு கலைஞர், அரசுப் பொறுப்பில் இல்லாதபோதுதான் தமிழ்த் திரைப்படங்களுக்கு கதை, வசனம் எழுத ஒப்புக்கொண்டார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

577

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131